**In the Court of the Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **STC 11/2023** | | |
| **PW/DW/CW** | : | **DW2** | | |
| **Name** | : ஜான்சிராணி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.11.2025

---

**முதல் விசாரணை**

நான் உசிலம்பட்டி PMT நகரில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரரை எனக்கு தெரியும். புகார்தாரரின் மனைவி பெயர் ரஞ்சிதம். அவரது மனைவிக்கு என்னை தெரியும். புகார்தாரர் மனைவி ரஞ்சிதம் வட்டிக்கு பணம் கொடுத்தும், ஏல சீட்டு பிடித்தும் வருகிறார். 01.08.2021ம் தேதி புகார்தாரரின் மனைவியை அவரது வீட்டில் வைத்து பார்த்து ஏலச்சீட்டை ரூபாய் 2 லட்சத்திற்கு எடுத்தேன். பேச்சியம்மாள் என்ற பிரணவ தக்ஷா என்ற பெயரில் ஏலச்சீட்டு நடத்தி வருகிறார். நான் முதல் தவணையாக ரூபாய் பத்தாயிரம் கட்டினேன். என்னை 20 தவணைகள் கட்ட சொன்னார்கள். மேற்படி ஏலச்சீட்டில் பாஸ் புத்தகம் கொடுத்தார்கள். அந்த பாஸ் புத்தகம் எ.மா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் ஏலச்சீட்டில் மொத்தம் 16 மாத தவணைகள் கட்டியுள்ளேன். 14வது தவணையில் நான் ஏலத் தொகையை எடுத்தேன். அதன்பின்பு 15வது தவணைக்கு பணம் கட்டிவந்தபோது பொறுப்பிற்கு ஒரு காசோலையை என்னிடம் கேட்டார்கள். நான் அல்லிகுண்டம் ஐசிஐசிஐ வங்கிக்குரிய என் கணக்கில் உள்ள காசோலையை கையெழுத்து மட்டும் போட்டு புகார்தாரர் மனைவிடம் ரஞ்சிதம் இடம் கொடுத்தேன். அதற்கு பின்பும் 16வது மாத தவணையை கட்டினேன். அதன்பின்பு நான் மாத தவணையை கட்டவில்லை. அதன்பின்பு தான் அய்யர் மூலமாக எனக்கு வழக்கறிஞர்

அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதை வாங்கி படித்து பார்த்தேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார்தாரரிடம் நான் ரூபாய் 12 லட்சம் வாங்கியதாகவும் அதற்கு வழக்கு காசோலையை கொடுத்ததாகவும் அதில் குறிப்பிட்டு இருந்தது. நான் மேற்படி புகார்தாரரிடம் இருந்து ரூபாய் 12 லட்சம் வாங்கவில்லை, காசோலையும் கொடுக்கவில்லை.அதன்பின்பு இதுபற்றி மேற்படி ரஞ்சிதம் கேட்டேன். அதற்கு அவர் மீதி சீட்டு தொகையை கட்டினால் காசோலையை திரும்ப தருவதாக சொன்னார். நான் மீத சீட்டு தொகை ரூபாய் 42,000/-த்தை அன்றைய தினமே கொடுத்துவிட்டேன். நான் காசோலையை திரும்ப கேட்டபோது கணவர் வந்தவுடன் மூன்று நாட்களில் தந்துவிடுவதாக சொன்னார். ஆனால் சொன்னபடி காசோலையை திரும்ப தரவில்லை. அதன்பின்பு மேற்படி காசோலையை பயன்படுத்தி புகார்தாரர் இந்த வழக்கு என்மீது போட்டுள்ளார். நான் புகார்தாரரிடம் எந்த பணமும் வாங்கவில்லை, காசோலையையும் கொடுக்கவில்லை. அவர் மனைவி மூலம் சீட்டு பணத்திற்காக என்னிடம் வாங்கி காசோலையை மோசடியாக பயன்படுத்தி என்மீது புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அம்மன்முத்தன்பட்டியை சேர்ந்த சரத், ராஜ்குமார் மூலமாக தான் புகார்தாரரின் மனைவி ரஞ்சிதம் எனக்கு தெரியும்.

(புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

S.d. Jansirani

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti